"DINAKARAN"

PAGE NO: 15

DATE: 14.06.2022

# புதுவை பல்கலைக்கழகத்தில் வளாக வேலைவாய்ப்பு முகாம்

## 48 மாணவர்களுக்கு பணி ஆணை



புதுவை பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சார்பில் வளாக வேலைவாய்ப்பு முகாம் நடந்தது.

**புதுச்சேரி, ஜூன் 14:** புதுவை பல்கலைக்கழக ஆங்கிலத் துறை வேலைவாய்ப்பு மையம் சார்பில் வளாக வேலைவாய்ப்பு முகாம் நேற்று முன்தினம் பல்கலைக்கழக வெள்ளிவிழா வளாகத்தில் நடந்தது. இம்முகாமை மானுடவியல் புலத்தின் தலைவர் கிளமெண்ட் லூர்து துவக்கி வைத்தார். ஆங்கில துறையின் தலைவர் மார்க்ஸ் பங்கேற்று பேசுகையில், இந்த வேலைவாய்ப்பு முகாமின் பிரதான நோக்கம் மாணவர்களுக்கு முறையான வாய்ப்பை வழங்குவதோடு அவர்களுக்கு வளாகத்திலேயே நேர்காணல் குறித்த ஒரு புதிய அனுபவத்தை வழங்குவதாகும். இது வெறும் துவக்கமே. எதிர்காலங்களில் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் அழைக்கப்பட்டு மாணவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்கான முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும் என பேசினார்.

இதில் வேலைவாய்ப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் ரேஷ்மி, பேராசிரியர் விசாகா தேவி, தேவ் கர் சொல்யூஷன்ஸ் மூத்த மனிதவளத் துறை மேலாளர் ஜானகிராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த வேலைவாய்ப்பு முகாமில் இந்தியா மற்றும் அமெரிக்காவில் கிளைகளை கொண்ட தேவ் கேர் சொல்யூசன்ஸ் என்கிற மென்பொருள் நிறுவனம் பங்கேற்று மாணவர்களை தேர்வு செய்தது. இதில் புதுவை பல்கலைக்கழகம் மற்றும் புதுவையில் உள்ள பிற கல்லூரிகளை சேர்ந்த சுமார் 90 முதுகலை மாணவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் 48 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இந்த மாணவர்கள் ஆண்டுக்கு ரூ.3.6 லட்சம் ஊதியத்தில் பணியில் அமர்த்தப்படுவர்.